# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வேலையாட்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஒற்றோபர் மாதம் 21 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 12.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வேலையாட்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டம்

[2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 17/2005
4859

## தொழில்தருநர்கள் வேலையாட்களுக்கு வரவு செலவுத் திட்ட நிவாரணப்படி கொடுப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் இத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** (1) இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வேலையாட்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2005 ஓகத்து 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

தகுதி வாய்ந்த அதிகாரி.

**2.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளரே தகுதி வாய்ந்த அதிகாரியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தினால் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை, தொழில் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்குத் தகுதிவாய்ந்த அதிகாரி கையளிக்கலாம்.

வரவு செலவுத் திட்ட படியின் கொடுப்பனவு.

**3.** (1) இரண்டாயிரத்தைந்தாம் ஆண்டு ஓகத்து 1 ஆம் தேதி தொடக்கம், ஏதேனும் தொழிலிலுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், அவரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் பின்வரும் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்ட நிவாரணப் படியொன்றை (இதனகத்துப்பின்னர் "படி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செலுத்துதல் வேண்டும் :—

(அ) இருபதாயிரம் ரூபாவை அல்லது அதற்குக் குறைவான தொகையை ஊதியமாகப் பெறும் வேலையாள் ஒருவரின் விடயத்தில் செலுத்தப்படற்பாலதான படி ஆயிரம் ரூபாவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய வேலையாளுக்கு வேலை வழங்குவதற்குத் தொழில் தருநரின் தவறுகை தவிர்ந்த வேறு ஏதேனும் காரணத்திற்காக, எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் அல்லது தொழில் ஒப்பந்தத்தால் விதித்துரைக்கப்பட்டவாறு தேவைப் படுத்தப்பட்ட எண்ணிக்கையினதான நாட்களுக்கு வேலை செய்யாத வேலையாள் ஒருவரின் விடயத்தில், அத்தகைய வேலையாளுக்குச் செலுத்தப்படற்பாலதான படியானது அம்மாதத்தின்போது அவர் வேலை செய்துள்ள நாட்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத் திலாதல் வேண்டும் ஆனால் ஆயிரம் ரூபாவை விஞ்சுதலும் ஆகாது ;

(ஆ) நாளாந்த வீதமொன்றைக் கொடுப்பனவாகப் பெறும் வேலையாளொருவரின் விடயத்தில், செலுத்தப்படற் பாலதான படியானது, அம்மாதத்தில் அவர் வேலை செய்துள்ள நாள் ஒவ்வொன்றிற்கும் நாற்பது ரூபா பணத்தொகையொன்றாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் மாதமொன்றுக்கு செலுத் தப்படற்பாலதான மொத்தப்படி ஆயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது ; அத்துடன்

(இ) துண்டு வீத அடிப்படையொன்றில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள வேலையாள் ஒருவரின் விடயத்தில், ஒரு மாதம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான படியா னது அம்மாதத்திற்கு அத்தகைய வேலையாளுக்குச் செலுத்தப்படற்பாலதான வேதனத்தின் அல்லது சம்பளத்தின் பத்துச் சதவீதத்திற்குக் குறைவாயிருத்த லாகாது :

ஆயின், எவ்வாறாயினும் மாதமொன்றுக்குச் செலுத் தப்படற்பாலதான மொத்தப்படி ஆயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது.

(2) எந்த வேலையாளுடைய வேதனங்கள் அல்லது சம்பளம் மாதமொன்றுக்கு இருபதாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்தும், ஆனால் இருபத்தோராயிரம் ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ, அந்த வேலையாள் ஒருவருக்கு ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் இருபத்தோராயிரம் ரூபாவுக்கும் அம்மாதத்திற்கு அத்தகைய வேலையாளினால் வேதனமாக அல்லது சம்பளமாகப் பெறப் படும் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்திற்குச் சமமான தொகையொன்று படியாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) 2004 ஒற்றோபர் மாதத்தில் அல்லது அதன் பின்னர் வேதன அல்லது சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொண்ட ஒரு வேலை யாள், ஆயிரம் ரூபாவுக்கும் வேதன அல்லது சம்பள அதிகரிப் பொன்றுக்கும் இடையிலான வித்தியாசத்திற்குச் சமமான தொகையை கருத்திற் கொண்ட (1) ஆம் உட்பிரிவின் கீழான படியொன்றைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராதல் வேண் டும்.

(4) (அ) கூட்டு உடன்படிக்கையொன்றினால் ; அல்லது

(ஆ) அத்தகைய வேலையாட்கள் தொடர்பில் கூட்டு உடன்படிக்கையின் ஏற்புடைமையை நீடிப்பதான (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்கு கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரி வின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளையொன் றினால் ;

ஆளப்படும் ஒரு வேலையாள் (1) ஆம் உட்பிரிவின்கீழான படி யொன்றுக்கு உரித்துடையவராதலாகாது.

(5) அமைச்சரானவர், தொழிலுக்கு இயைபான ஏதேனும் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தொழில் தொடர்பில் இப்பிரிவின் ஏற்பாடுகளின் நடைமுறையை அதன் கண் குறித்து ரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதிக்குப் பிற்போடலாம்:

ஆயினும், இவ்வுட்பிரிவின் நியதிகளின்படியான ஏதேனும் பிற்போடல் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அப்பால் நீடிக்கப்படுதலாகாது.

தொழில் தொடர்ந்துறுதல் தொடர்பான விசேட ஏற்பாடுகள்.

**4.** மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய எவரேனும் தொழில் தருநரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு வேலையாளும் அத்தகைய தொழில்தநருரின் வேலையாளாக அவர் தொடர்ந்தி ருக்கும்வரை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று அத்தகைய வேலையாள் அனுபவித்துவந்த வேதனத்திலும் அல்லது சம்பளத்திலும் படியிலும் அல்லது பணவகையான ஏனைய கொடுப்பனவுகளிலும் பார்க்க (அவை எப்பெயர் கொண்டு அல்லது விவரணப்பெயர் கொண்டு அழைக்கப்படினுஞ்சரி) குறைவான அனுகூலமுடையனவாக வல்லாத சம்பளம், படி அல்லது பணவகையான ஏனைய கொடுப் பனவுகள் தொடர்பான அத்தகைய நியதிகள்மீதும் நிபந்தனைகள் மீதும் அவ்வாறு தொடர்ந்தும் வேலைக்கமர்த்தப்பட்டுவருதல் வேண்டும்.

இடாப்பை பேணி வருவதற்குத் தொழில் தருநருக்கு இருக்கும் கடமை.

**5.** *(1)* ஏதேனும் தொழிலில் வேலையாளராக இருப்பவரின் தொழில்தருநர் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அத்தொழில் கொண்டு நடாத்தப்படும் வளவில், பின்வருவனவற்றை எடுத்துக் காட்டும் இடாப்பைப் பேணிவருத லும் வைத்திருந்து வருதலும் வேண்டும் :—

(அ) அவரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாள் ஒவ்வொருவரினதும் பெயர் ;

(ஆ) அவரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாள் ஒவ்வொருவராலும் புரியப்படும் வேலையின் வகுப்பு ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க படியாக அத்த கைய ஒவ்வொரு வேலையாளுக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பேணிவரப்படும் இடாப்பு ஒவ்வொன் றும் தொழில்தருநரினால் ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு பேணி வைத்திருத்தல் வேண்டும். தொழில்தருநர் ஒவ்வொருவரும், ஆணையாளரால் தேவைப்படுத்தப்படும்போது அத்தகைய இடாப்பைப் பரிசோதனைக்காக காண்பித்தல் வேண்டும் அல்லது அதன் உண்மையான பிரதியொன்றைக் கொடுத்துதவுதல் வேண் டும் அல்லது அத்தகைய பிரதியொன்றை எடுப்பதற்கு அனுமதித் தல் வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரியின் தத்துவங்கள்.

**6.** தகுதிவாய்ந்த அதிகாரி பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஏதேனும் இடாப்பைப் பரிசோதனை செய்யும் நோக்கத்துக்காக அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்தும் நோக்கத்துக்காக ஏதேனும் தொழிலில் உள்ள வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஏதேனும் இடத்தினுள் பகலிலோ அல்லது இரவிலோ நியாயமான நேரங்களிலெல்லாம் பிரவேசிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும் ; அல்லது

(ஆ) அவர் அத்தகைய இடத்தை சோதனையிடும்போது அத்தகைய இடாப்பு எதுவும் பரிசோதனைக்காக கிடைக்காவிட்டால் அவ்வதிகாரியால் குறித்துரைக்கப்படும் ஒரு பின்னைய தேதியில், அத்தகைய இடத்தில் அல்லது அத்தகைய அதிகாரியின் அலுவலகத்தில் அத்தகைய இடாப்பைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்துவதற்கு ; அல்லது

(இ) அத்தகைய ஏதேனும் இடாப்பில் முழுமையும் அல்லது அதன் ஏதேனும் பகுதியை பிரதி எடுப்பதற்கு ; அல்லது

(ஈ) அத்தகைய இடத்தில் காணப்படுகின்றவரும் அத்தகைய இடத்தில் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்களின் தொழில்தருநரொருவரென அவர் நம்புவதற்கு நியாயமான காரணமுள்ளவருமான எவரேனும் ஆளை வினவுவதற்கு ; அல்லது

(உ) ஏதேனும் தொழிலிலுள்ள வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாட்களின் தொழில் தருநர் எவரையும் எழுத்தில் —

(i) அத்தகைய எவரேனும் தொழில்தருநரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எல்லா வேலையாட்கள் பற்றியதும் அல்லது அத்தகைய வேலையாட்களின் ஏதேனும் குறித்துரைக்கப்

பட்ட வகுப்பினர் அல்லது விவரணத்தினர் பற்றியதும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய விவரணங்களைக் கொண்டுள்ளதுமான விவரத்திரட்டொன்றை ;

(ii) அத்தகைய எவரேனும் தொழில்தருநரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் கூறப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பில் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை அல்லது விளக்கத்தை ; அல்லது

(iii) அத்தகைய எவரேனும் தொழில்தருநரால் பேணி வரப்படும் ஏதேனும் இடாப்பு முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பகுதியினது உண்மைப் பிரதியை,

குறித்துரைக்கப்படும் தேதியன்று அல்லது அதன் முன்னர் அவருக்குக் கொடுத்துதவும்படி எழுத்தில் பணிப்பதற்கு.

தவறுகளும் தண்டங்களும்.

**7.** (அ) 6 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் உட்பிரவேசத்திற்கு அல்லது பரிசோதனைக்கான அல்லது அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமான அத்தகைய உதவிகளை தகுதிவாய்ந்த அதிகாரிக்கு ஏற்பாடு செய்து கொடுத்துதவத் தவறும் ; அல்லது

(ஆ) அப்பிரிவால் அவருக்கு அளிக்கப்பட் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்தகைய அதிகாரிக்கு தடையாக இருக்கும் அல்லது தடங்கல் செய்யும் ; அல்லது

(இ) காண்பிக்கும்படி அல்லது கொடுத்துதவும்படி அத்தகைய அதிகாரி தேவைப்படுத்தும் ஏதேனும் இடாப்பினைக் காண்பிக்க அல்லது தகவலைக் கொடுத்துதவ மறுக்கும் ; அல்லது

(ஈ) ஏதேனும் பொய்யான கூற்றை ஏதேனும் இடாப்பில் எழுதும் அல்லது எழுதச்செய்யும் அல்லது அத்தகைய அதிகாரிக்கு பொய்யான கூற்றொன்றைக்

கொண்டுள்ள ஏதேனும் இடாப்பை அது பொய்யானதென அறிந்துகொண்டே காண்பிக்கும் அல்லது காண்பிக்கச் செய்யும் அல்லது அறிந்து கொண்டே காண்பிக்க அனுமதிக்கும் ; அல்லது

(உ) அப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயலாற்றும் அத்தகைய அதிகாரிக்கு ஏதேனும் தகவலை அது பொய்யானதென அறிந்துகொண்டு கொடுத்துதவும் ; அல்லது

(ஊ) அத்தகைய அதிகாரியால் 6 ஆம் பிரிவின்கீழ் விடுவிக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறும் அல்லது அப்பிரிவின்கீழ் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவும்படி கோரப்பட்டதன்மேல் ஏதேனும் பொய்யான கூற்றைக் கொண்டுள்ள விவரத்திரட்டொன்றை அறிந்துகொண்டே தயாரிக்கும் அல்லது கொடுத்துதவும் அல்லது தயாரிக்கும் அல்லது கொடுத்துதவச் செய்யும்,

ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கு இருவகையிலொருவகையிலான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

*இச்சட்டத்தின்கீழ் போகுமதியான கொடுப்பனவு, வேலையாளொருவரின் வேதனங்களின் அல்லது சம்பளத்தின் பாகமாக வமைதல்.*

**8.** இச்சட்டத்தின்கீழ் வேலையாளொருவருக்குச் செலுத்தப்படற்பாலதான படி, எல்லா நோக்கங்களுக்காகவும் -

(அ) ஊழியர் சகாயநிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கும் ஓய்வூதியத்துக்குமான உதவு தொகை ;

(ஆ) வருடாந்த விடுமுறை ஊதியம் ;

(இ) மேலதிக நேரவேலை ஊதியம் ;

(ஈ) மகப்பேற்று நன்மைக் கொடுப்பனவுகள் ; அத்துடன்

(உ) பணிக்கொடை,

என்பனவற்றை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வேலையாளின் வேதனத்தின் அல்லது சம்பளத்தினது பாகமாகவமைதலும் வேண்டும். அத்தகைய எவரேனும் வேலையாளின் தொழில்தருநர் ஒவ்வொருவரும் அத்தகைய வேலையாளின் வேதனத்தை அல்லது சம்பளத்தை எக்காலப்பகுதியினுட் செலுத்துவதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றாரோ, அத்தகைய தொழில்தருநர் அக்காலப்பகுதியினுள் அத்தகைய படியைச் செலுத்துதல் வேண்டும்.

வேலையாட்களுக்குப் போமதியான பணத்தொகைகளைச் செலுத்தத் தவறுதல்.

**9.** (1) இச்சட்டத்தின்கீழ் வேலையாளொருவருக்குச் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பணத்தொகையொன்றைச் செலுத்துவதற்குத் தவறுகின்ற எவரேனும் தொழில்தருநர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் வேலையாளொருவருக்குச் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதற்குத் தவறியமைக்காகத் தொழில்தருநரொருவருக்கு நீதிவானினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நீதிமன்றமானது, அத்தகைய தவறுக்காக விதிக்கப்படும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, கட்டளையிற் குறித்துரைக்கப்படும் காலப்பகுதியொன்றினுள் அத்தகைய வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகையைச் செலுத்தும்படி அத்தகைய தொழில்தருநருக்குக் கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், அப்பணத் தொகையானது அவ்வாறு செலுத்தப்படாவிடின், அத்தகைய பணத் தொகையானது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப் பணமொன்றென்றாற்போன்று நீதிமன்றக் கட்டளைமூலம் அறவிடப்பட்டு அத்தகைய வேலையாளுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

குறித்தசில விடயங்களில் வேலை யாட்களுக்குப் போகுமதியான பணத் தொகைகளை அறவிடுதல்.

**10.** (1) இச்சட்டத்தின்கீழ் தொழில்தருநரொருவரின் வேலையாளொருவருக்குச் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதற்குத் தவறியமைக்காக அத்தகைய தொழில்தருநருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள விடத்து, அப்போது, விளக்கம் தொடங்கும் தேதிக்கு முன்னரான எந்நேரத்திலும் அவ்வாறு செய்வதற்கான நோக்கம் பற்றிய அறிவித்தலொன்று விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் தொழில் தருநருக்குச் சேர்ப்பிக்கப்பட்டிருப்பின், தொழில்தருநர் எந்தத் தவறுக்கு அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரோ அந்தத் தவறு பற்றிய முறைப்பாடு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட தேதிக்கு முற்போந்த ஆறாண்டுகளின்போது எந்நேரத்திலும் அவ்வேலை யாளுக்கு அல்லது வேலையாட்களுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கிணங்க ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதற்குத் தொழில்தருநர்பாலான ஏதேனும் தவறுதல் பற்றிய சான்று கொடுக்கப்படலாமென்பதுடன், தவறுதல் பற்றிய எண்பிப்பின் மீது, நீதிமன்றமானது, அத்தகைய வேலையாளுக்கு அல்லது வேலையாட்களுக்குத் தொழில்தருநரிடமிருந்து போகுமதியான தென நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையைச் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடலாம். இவ்வுட்பிரிவின்கிழ் செலுத்தப்படும்படி கட்டளையிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை, நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப் பணமொன்றென்றவாறாக அதேமுறையில் அறவிடப்படலாம்.

(2) இப்பிரிவில் "விதித்துரைக்கப்பட்ட" என்பது, 11 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப் பட்ட என்று பொருளாகும்.

ஒழுங்கு விதிகள்.

**11.** (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்களுக்காக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படு கின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங் கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்த கைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித் துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக்கூடிய ளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன் னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ் வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**12.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலொழிய -

"கூட்டுடன்படிக்கை" என்பது, (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்திலுள்ள அதேபொரு ளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆணையாளர்" என்பது, தொழில் ஆணையாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் என்று பொரு ளாகும் என்பதுடன், ஒரு பிரதித் தொழில் ஆணையாள ராக அல்லது ஓர் உதவித்தொழில் ஆணையாளராக அல்லது ஒரு தொழில் அலுவலராக அப்போதைக்குப் பதவி வகிக்கின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும் ;

"தொழில்தருநர்" என்பது, ஏதேனும் தொழிலில் எவரேனும் வேலையாளைத் தமது சொந்தச் சார்பில் வேலைக் கமர்த்துகின்ற, அல்லது அவரது சார்பில் வேறெவ ரேனுமாள் வேலைக்கமர்த்துகின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் என்பதுடன், வேறெவரேனுமா ளின் சார்பில் ஏதேனும் தொழிலில் எவரேனும் வேலை யாளை வேலைக்கமர்த்துகின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும் ;

"தொழில்" என்பது, தொழில்தருநர் அல்லது வேலையாள் ஒருவரினால் கொண்டுநடாத்தப்படும், புரியப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் கைத்தொழில், வியாபாரம், பொறுப்பு முயற்சி, அரசாங்கத்துக்குச்

சொந்தமான தொழிற்பொறுப்பு முயற்சி, வாழ்க்கைத் தொழில், உயர்தொழில் அல்லது செயல் தொழில் என்பவற்றையும், ஏதேனும் தொழிலின் கிளையையும் அல்லது ஏதேனும் தொழிலிலான ஏதேனும் பணியையும் அல்லது செய்முறையையும் உள்ளடக்கும், ஆனால் மானியக்கொடை மற்றும் கடன் என்றவகையாக அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன் அரசாங்கம் பங்குமூலதனத்தின் பெரும்பான்மையை வைத்திருக்குமிடத்து ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனத்தினால், சபையினால் அல்லது வேறு குழுவினால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் கைத்தொழிலை, வியாபாரத்தை அல்லது தொழிலை உள்ளடக்காது ;

"வேதனம் அல்லது சம்பளம்" என்பது சம்பாத்தியங்கள் என்று பொருளாகும் என்பதுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் ,—

(அ) வேலையாள் எத்தொழிலைச் சேர்ந்துள்ளாரோ அத்தொழிலுக்காக, வேலையாளின் ஒப்பந்த முறையிலான வேதனம் அல்லது சம்பளம் அல்லது இயைபான சம்பளச் சபையினால் விதித்துரைக்கப்பட்ட வேதனத்தையும் ; அத்துடன்

(ஆ) 1968 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஊழியர்களின் இடைக்கால மதிப்பிறக்கப்படிச் சட்டத்தின்கீழ் வேலையாளுக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொகையையும்.

"வேலையாள்" என்பது, ஏதேனும் தொழிலில் ஏதேனும் வேலையைப் புரிவதற்கு, எழுத்திலான, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஓர் ஒப்பந்தத்தின்கீழான ஊழியரொருவர் அல்லது நாளாந்த வேதனாதியொன்றை உழைக்கின்ற ஆளொருவர் அல்லது எவரேனும் தொழில்தருநரினால் ஏதேனும் பதவியில்

வேலைக்கமர்த்தப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும் என்பதுடன், அவரது வேதனம் அல்லது சம்பளம் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறு வகையாக ஒழுங்குபடுத்தப்பட்ட வேலையாளொருவரையும் துண்டு வீத அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட வேலையாளொருவரையும் உள்ளடக்கும், ஆனால் வீட்டு வேலையாளொருவரை அல்லது தொழில்தருநரொருவரின் சொந்தக் கார்ச் சாரதியொருவரை உள்ளடக்காது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*